C.O.S.No.2/2023 தேதி – 23.01.2025

வா.சா.1. – ஹரீஸ்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

வா.சா.ஆ.3 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்தும், அலுவலக முத்திரையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் இந்திய சாட்சிய சட்டத்தின் படி அமைந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்துடன் இணைக்கப்பட்ட Screenshort தொகுப்புகள் உண்மையானவை அல்ல என்றும் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் பிராதுடன் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 வங்கி வரவு செலவு கணக்குகளில் உண்மை நிலை தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்னால் பராமரிக்கப்பட்டுவரும் வியாபர வரவு செலவு ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்தால் தான் வா.சா.ஆ.7 ஆவணத்தின் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் எங்கள் ஆடிட்டரால் பதிவிறக்கம் செய்யப்பட்டு என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் அரசு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படவில்லை என்றால்சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்திற்கான சாட்சிய சட்ட சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். முழு தொகுப்பும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் வழக்கிற்காக வா.சா.ஆ.8 ஆவணம் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணமான இன்வாய்ஸ் தொகுப்புகளில் இன்வாய் எண்.29ல் என் தந்தை கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் செக் என்ற முத்திரையும், ரிசீவ்ட் என்ற கையொப்பமும் பிரதிவாதி நிறுவனத்தை சேர்ந்தவர்களால் போடப்படவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை 2021ம் வருடம் நவம்பர் மாதம் தீபாவளி சமயத்தில் வேலை விட்டு நிறுத்தப்பட்டார். என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. என் தந்தை வேலையை விட்டு நின்ற பிறகு சுமார் 1 வருடம் கழித்து காவல்நிலையத்தில் பிரதிவாதியால் புகார் கொடுக்கப்பட்டது. காவல்நிலைய விசாரணைக்கு நான் என் தந்தையுடன் சென்றேன். மேற்படி காவல்நிலையத்தில் என் மீது புகார்

கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனுவில் தங்களுடைய நிறுவன தயாரிப்பு formula என் தந்தைக்கும், தலைமை வேதியியலாளருக்கும் மட்டும் தெரியும் என்றும், என் தந்தை தரம் குறைவான வேதியல் பொருட்களை கொள்முதல் செய்து அதன் மூலம் பிரதிவாதி நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டதாக புகார் மனுவில் தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. ஜெய்தீப் என்ற நிறுவனத்திலிருந்து பிரதிவாதி நிறுவனம் பாஸ்பரிக் ஆசிட் வாங்குவதற்கு என் தந்தை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் சரியல்ல. ஜெய்தீப் என்ற நிறுவனத்திலிருந்து என்னுடைய நிறுவனத்திற்கு ரூபாய் 125 க்கு வாங்கி அதனை பிரதிவாதி நிறுவனத்திற்கு ரூபாய் 279 விற்பனை செய்தோம் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி நிறுவனத்திற்கு சப்ளே செய்த பாஸ்பரிக் ஆசிட் நானே பம்பாய் சென்று நேரடியாக கொள்முதல் செய்து பிரதிவாதி நிறுவனத்திற்கு சப்ளே செய்தேன். பொன்மணி செம் என்ற பொருளை பிரதிவாதி நிறுவனத்திற்கு நான் சப்ளே செய்யவில்லை. அம்மோனியா கரைசல் என்பது தீப்பெட்டி தொழிலுக்கு தேவையான மூலப்பொருள் ஆகும். கணேஷ் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து என் தந்தை அம்மோனியா கரைசலை பிரதிவாதி நிறுவனத்திற்கு வாங்கி கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கீர்கெம் என்ற நிறுவனம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனம் வெஜிடபிள் மெழுகு என்ற மூலப்பொருளை விற்பனை செய்கிறார்கள் என்றால் சரிதான். என் தந்தை கமிஷன் பெற்றுக்கொண்டு மேற்படி கீர்கெம் என்ற நிறுவனத்திடமிருந்து தரமற்ற மெழுகை பிரதிவாதி நிறுவனத்திற்கு சப்ளே செய்தார் என்றால் சரியல்ல. வெஜிடபிள் மெழுகு என்ற மூலப்பொருளை கீர்கெம் என்ற நிறுவனம் எங்கள் மூலம் பிரதிவாதிக்கு சப்ளே செய்யப்பட்டது என்றால் சரிதான், மேற்படி நிறுவனம் சிவகாசியில் உள்ள மற்ற நிறுவனங்களுக்கும் சப்ளே செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு முறைகேடுகள் செய்து என் தந்தை சொத்துக்கள் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. திருத்தங்கல் ஸ்டாண்டர்டு காலனியில் என் தாயார் பெயரில் 2 வீடுகள் உள்ளது. திருத்தங்கலில் எங்களுக்கு 6 கடைகள் 10 x 10 என்ற அளவில் உள்ளது. அண்ணாமலையார் காலனியில் பூர்வீக வீடு உள்ளது. காரநேசன் காலனியில் எங்களுக்கு சொந்தமான வீடு உள்ளது. எம் ஐ போன் நிறுவனத்தில் டீலர்சிப் எடுப்பதற்காக ரூபாய் 1 கோடி செலுத்தி உழவர் சந்தை அருகே

மொபைல் ஆபிஸ் நடத்தி வருவதாக சொன்னால் சரிதான், 1 கோடி என்பது சொத்தாக செலுத்தியுள்ளோம். நான் பிராதில் கூறிய தொகையை பிரதிவாதி தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கு உரிய சான்றிதழ் சமர்பிக்கப்படவில்லை என்பதால், என்னுடைய பிராது தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.